Cr. Misc. 19

# DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Civil Procedure)

IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, DHARMAPURI

Calendar Miscellaneous
Preliminary Registered — Case No. **S.C. No.1 of 2025**
Sessions

| | |
|---|---|
| Deposition of Witness for | : **PW6(LW9)** |
| Name | : திரு. சுனில்ராஜ் |
| Father's Name | : சூடாமணி |
| Village | : பிக்கனஅள்ளி |
| Taluk | : பாலக்கோடு |
| Calling | : கூலி வேலை |
| Age | : 24 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **07.10.2025.**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**<u>முதல் விசாரணை:</u>**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். என் வீட்டிற்கு பக்கத்து வீட்டுக்காரர் ராஜேஸ்வரி ஆகும். 01.11.2024ம் தேதி இரவு சுமார் 08.00 மணியளவில் என் பக்கத்து வீட்டு ராஜேஸ்வரியின் மருமகன் அசோக்குமாரை பென்னாகரத்தை சேர்ந்த சத்தியமூர்த்தி என்பவர் கொலை செய்துவிட்டு போய்விட்டார். 02.11.2024ம் தேதி காலை சுமார் 10.00 மணியளவில் நானும் என் பக்கத்து வீட்டுக்காரர் ரத்தினகுமாரும் கொலை செய்த இடத்தில் நின்றிருந்தோம். அப்போது

மாரண்டஹள்ளி காவல் ஆய்வாளர் அங்கு வந்தார். அப்போது ஆய்வாளர் அந்த இடத்தில் வரைபடம் தயாரித்தார். மேலும் மகஜர் தயார் செய்து அதில் என்னிடமும் ரத்தினகுமாரிடமும் சாட்சி கையொப்பம் பெற்றார். பார்வை மகஜரில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். பார்வை மகஜர் **அ.சா.ஆ.4** ஆகும். இது சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

நான் பத்தாம் வகுப்பு வரை படித்துள்ளேன். அ.சா.ஆ.4 பார்வை மகஜரில் கையொப்பம் இடத்திற்கு மேலாக எதும் எழுதப்படாமல் காலியாகத்தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். அந்த இடத்தில் 4–5 வரிகள் பூர்த்தி செய்யப்படலாம் என்றால் சரிதான். பார்வை மகஜர் எழுதப்படாத தாளில் கையொப்பம் இட்ட காரணத்தினால்தான் பின்னிட்டு அதில் விவரங்கள் எழுதப்பட்டதால் அந்த இடைவெளி உள்ளது என்று சொல்வது சரியல்ல. மாரண்டஹள்ளி காவல் ஆய்வாளர் சம்பவ இடத்திற்கு வந்து பார்வை மகஜர் தயாரித்தபோது நானும் ரத்தினகுமார் என்பவரும் உடன் இருந்தோம். பாலக்கோடு–ஓசூர் செல்லும் வழியின் வலது புறத்தில் தான் கொலை நடந்த இடம் என்றால் சரிதான். பிரதான சாலையிலிருந்து சம்பவம் நடைபெற்ற ராஜேஸ்வரியின் வீடு வரை சுமார் 15 வீடுகள் இருக்கும். கொலை நடந்த நேரத்தில் நான் உடன் இருந்தேன். தற்போது சாட்சி மறுத்து கொலை நடந்த நேரத்தில் நான் இல்லை என்று கூறினார். இறந்த நபர் அசோக்குமாருக்கும் எனக்கும் பேச்சுவார்த்தை அவ்வளவாக இல்லை. அசோக்குமார் சம்பவம் நடந்த நேரத்தில் எதற்கு வந்தார் என்ற விவரம் எனக்கு

தெரியாது. நான் அதே ஊரை சேர்ந்தவர். ராஜேஸ்வரி வீடு சம்பவம் நடைபெற்ற வரை இருந்தது. தற்போது இல்லை, சம்பவம் நடைபெற்ற காலத்தில் ஊரில் வீடு கட்டப்பட்டதால் சம்பவ இடத்தில் தற்காலிகமாக குடியிருந்தார். இறந்த அசோக்குமாரின் மனைவி பெயர் சுகன்யா. சுகன்யாவின் தம்பி சுந்தர் இருக்கிறார். சுகன்யா தற்போது எங்கு உள்ளார் என்று எனக்கு தெரியாது. இறந்த அசோக்குமார் மற்றும் ஊரில் உள்ள மற்ற நபர்கள் விசேஷ நாட்களில் வெளியூரிலிருந்து விடுமுறை காலத்தில் வந்து மது அருந்துவது வழக்கம் என்றால் சரிதான். சிறு சிறு சண்டைகள் போதையில் இருப்பதால் அவ்வப்போது ஏற்படும். இறந்த அசோக்குமார் சம்பவ இடத்திற்கு எப்படி போனார் என்று எனக்கு தெரியாது. அன்று அசோக்குமார் குடித்திருந்தாரா என்றால் எனக்கு தெரியாது, நான் அன்று அவரை பார்க்கவில்லை. காலை சுமார் 10.00 மணிக்கு முன் காவல் நிலையத்தில் வைத்து எதிரி சத்தியமூர்த்தியை பார்த்தேன். எப்படி எதிரியை கைது செய்தார்கள் என்று அங்கு கூடியிருந்த ஊர்காரர்கள் யாரும் பகிரவில்லை. இறந்தவரின் மனைவி சுகன்யாவை நான் காவல் நிலையத்தில் வைத்து பார்த்தேன். அப்போது அவர் காவல் நிலையத்தில் உள்ளே இருந்தார். யார் புகார் கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது. இரவே கைது செய்யப்பட்டதாக தகவல் தெரிந்து நானும் ஊரில் உள்ளவர்களும் காவல் நிலையம் சென்றோம். யார் எதிரி என்று பார்ப்பதற்காக நாங்கள் சென்று பார்த்தாம். நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் எதுவும் நடக்கவில்லை என்றும் பார்வை மகஜர் மற்றும் வரைபடம் ஆகியன நான் சொன்ன நேரத்தில்

தயாரிக்கவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்த ஆவணங்களில் நான் கையொப்பம் செய்து அரசு தரப்பிற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>– இல்லை

Taken down by me in the presence of Accused. Readover to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 07.10.2025.

THIRUMAGAL C Digitally signed by THIRUMAGAL C Date: 2025.10.07 16:45:15 +0530

Principal Sessions Judge,
Dharmapuri.

Cr. Misc. 19

# DEPOSITION OF WITNESSES

(Chapter XXIII Code of Civil Procedure)

IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, DHARMAPURI

| | |
|---|---|
| Calendar Miscellaneous<br>Preliminary Registered<br>Sessions | Case No. **S.C. No.1 of 2025** |
| Deposition of Witness for | : **PW7(LW10)** |
| Name | : திருமதி.அம்பிகா |
| Husband Name | : சீனிவாசன் |
| Village | : மதகேரி |
| Taluk | : பாலக்கோடு |
| Calling | : கிராம நிர்வாக அலுவலர் |
| Age | : 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **07.10.2025.**

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**முதல் விசாரணை:**

நான் மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் பிக்கனஅள்ளி கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த ஒரு வருடமாக அந்த கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். 02.11.2024ம் தேதி நான் மதியம் 02.00 மணியளவில் பிக்கனஅள்ளி கிராம நிர்வாக அலுவலகத்தில் இருந்தபோது மாரண்டஹள்ளி காவல் ஆய்வாளர் எனக்கு கைப்பேசி மூலம் தொடர்பு கொண்டார். மகேந்திரமங்கலம் காவல் நிலைய குற்ற வழக்கிற்காக சத்தியமூர்த்தி என்பவரை கைது செய்து வைத்திருப்பதாகவும்

அவர் ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பதாக கூறியுள்ளார் என்றும் அதற்கு சாட்சியாக இருக்க என்னையும் என் உதவியாளர் இல்லாத காரணத்தினால் பக்கத்து கிராம உதவியாளர் செல்வகுமாரை அழைத்து வர சொன்னார். அதன் பேரில் மாலை 04.00 மணியளவில் மகேந்திரமங்கலம் காவல் நிலையம் சென்றோம். அப்போது ஆஜர் எதிரி சத்தியமூர்த்தி ஆய்வாளரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். வாக்குமூலத்தின் இறுதி பகுதியில் நான் கொலைக்கு பயன்படுத்திய TN 29 BM 2308 என்ற எண் கொண்ட இரு சக்கர வாகனத்தையும், அப்போது நான் கொலை செய்யும் போது போட்டிருந்த சிமெண்ட் கலர் பேன்ட், புளு கரும்பச்சை கலர் கொண்ட வெள்ளை கலர் கட்டம் போட்ட முழு கை சட்டை, கொலை செய்ய பயன்படுத்திய சூரி கத்தியையும் பாப்பாரப்பட்டி சுப்ரமணிய சிவா சமாதி அருகில் மறைத்து வைத்திருப்பதாகவும் அதை என்னை அழைத்து சென்றால் நான் எடுத்து தருவதாக சொல்லி வாக்குமூலம் கொடுத்தார். ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ.5** ஆகும். அந்த வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன். எனக்கு பின்னிட்டு எனது உதவியாளரும் கையொப்பம் செய்தார். பின்னிட்டு காவல் வாகனத்திலேயே நான், உதவியாளர், எதிரி மற்றும் போலீசார் பாப்பாரப்பட்டி சுப்ரமணிய சிவா சமாதி அருகே சென்றோம். அங்கு மறைத்து வைத்திருந்த இரு சக்கர வாகனம் மற்றும் துணிகள், கத்தி ஆகியவற்றை எடுத்து ஒப்படைத்தார். அந்த பொருட்களை காவல் ஆய்வாளர் மகஜரில் கைப்பற்றினார். அந்த மகஜரில் நானும் உதவியாளரும் கையொப்பம் செய்தோம். கைப்பற்றுதல்

மகஜர் **அ.சா.ஆ.6** ஆகும். TN 29 BM 2308 என்ற எண் கொண்ட இரு சக்கர வாகனம் **சா.பொ.2,** புளூ கரும்பச்சை கலர் கொண்ட வெள்ளை கலர் கட்டம் போட்ட முழு கை சட்டை–**சா.பொ.3**, சிமெண்ட் கலர் பேன்ட்–**சா.பொ.4**. இது சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)</u>**

எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் கைப்பற்றப்பட்ட சான்று பொருட்கள் அனைத்தும் ஒளித்து வைத்திருப்பதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். பாப்பாரப்பட்டி சுப்ரமணிய சிவா சமாதி உள்ள இடம் பொது இடம். நான் அந்த இடத்திற்கு செல்வதற்கு முன்பு சான்று பொருட்கள் எத்தனை நாட்கள் இருந்தது என்று எனக்கு தெரியாது. நான் செல்லும்போது அங்கு இருந்தது. கைப்பற்றப்பட்ட சட்டையை என் முன்தான் பேக் செய்தார்கள். கைப்பற்றப்பட்ட பேன்டில் இடது பக்கம் சிறிது துளி அளவில் இரண்டு இரத்த கரை உள்ளது. சட்டையில் இரத்த கரை இல்லை. எதிரியை எத்தனை மணிக்கு கைது செய்யப்பட்டார் என்று காவல் ஆய்வாளர் தகவல் சொன்னார். ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையொப்பம் இட மட்டுமே என்னை வர சொன்னார். அவரை ஒரு கொலை வழக்கில் கைது செய்யப்பட்டதாக கூறினார். காவல் நிலையத்திற்கும் என் கிராம நிர்வாக முகாம் அலுவலகத்திற்கும் சுமார் 5 கிமீ தூரம் இருக்கும். காவல் நிலையத்திற்கு சென்றபோது நான் என் சீல்–ஐ எடுத்து செல்லவில்லை என்றால் சரிதான். நான் சீல் எடுத்து செல்லாதது தவறுதான். காவல் நிலையத்தில் தயாரிக்கப்பட்ட

ஆவணம் அனைத்திற்கும் நான் கையொப்பம் தான் செய்தேன். அதற்காகத்தான் சீல் எடுத்து போகவில்லை என்று சொன்னால் சரியல்ல. நான் காவல் நிலையத்திற்கு சென்றபோது எதிரி காவல் ஆய்வாளர் அறையில் இருந்தார். எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கும்போது எதிரி சொல்ல சொல்ல காவல் நிலையத்தில் உள்ள லேப்டாப்பில் தட்டச்சு செய்தார்கள். அவ்வாறு தட்டச்சு செய்தவர் காவல் நிலையத்தில் உள்ள காவலர்தான் என்றால் சரிதான். என் முன்னிலையில் எதிரி எந்த ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றும் சான்று பொருட்கள் கைப்பற்றப்படவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. காவல் ஆய்வாளர் கேட்டு கொண்டதற்கிணங்க அரசு தரப்பிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 04.00 மணியளவில் காவல் நிலையம் சென்றேன். அங்கு ஒரு மணி நேரம் ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. அதன் பின்பு காவல் நிலையத்திலிருந்து பாப்பாரப்பட்டி சுப்ரமணிய சிவா சமாதி இடத்திற்கு செல்ல 45 நிமிடம் ஆகும் என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டு பேக் செய்து அங்கேயே கையொப்பம் பெறப்பட்டது. மாலை 06.15 மணியளவில் நான் கையொப்பம் செய்தேன். சுமார் 07.00 மணிக்கு காவல் நிலையத்தில் என்னை விட்டார்கள். 03.00–07.00 மணி வரை நான் காவல் நிலைய பணியில் தான் இருந்தேன் என்றால் சரிதான். என்னை காவல் நிலையத்திற்கு அழைத்த விவரத்தை தாசில்தாரிடம் சொன்னேன். இறந்தவர் பெயர் அசோக்குமார் என்ற விவரம் தெரியும். அவர் பிக்கனஅள்ளியில் இறந்தார். இறந்த நபர் அவரது மாமியார் ராஜேஸ்வரி

வீட்டருகே கொலை நடந்ததாக எனது விசாரணையில் தெரிய வந்தது. நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தேன். கோவிலும் வீடும் ஒரே திசையில் உள்ளது. பாலக்கோடு வரும் வழியில் வீடு அல்ல, கோவில் அருகே தான் வீடு உள்ளது. பிரதான சாலையிலிருந்து சுமார் 100 மீ அளவில்தான் சம்பவம் நடந்தது. சுமார் 4–5 வீடுகள் மட்டுமே இருக்கும். அங்கு நான் சென்று அறிக்கை எனது மேலதிகாரிக்கு சமர்ப்பித்தேன். நான் சம்பவ இடத்திற்கு செல்லாமல் போலீசார் கேட்டு கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>– இல்லை

Taken down by me in the presence of Accused. Readover to the witness and admitted by the witness as true and correct and signed in my presence on 07.10.2025.

THIRUMAGAL C Digitally signed by THIRUMAGAL C Date: 2025.10.07 16:45:21 +0530

Principal Sessions Judge,
Dharmapuri.